பிரஸார் பாரதி
அகில இந்தியவானொலி, சென்னை- 4

21 05 2024 6 30

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. காங்கிரஸ் ஒரு வாரிசு அரசியல் கட்சி என்றும், ஒரு குடும்பத்தின் நலனுக்காகவே அக்கட்சி செயல்பட்டு வருவதாகவும் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.
2. ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டதில் அரசியல் உள்நோக்கம் இருப்பதாக ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.
3. தமிழகத்துக்கு காவிரியில் இரண்டு புள்ளி ஐந்து டி எம் சி தண்ணீரை திறந்துவிட கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.
4. தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
5. ஐ பி எல் கிரிக்கெட் முதல் தகுதிச் சுற்று ஆட்டத்தில் இன்று கொல்கத்தா அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

**[]<<<>>>[]**

காங்கிரஸ் ஒரு வாரிசு அரசியல் கட்சி என்றும், ஒரு குடும்பத்தின் நலனுக்காகவே அக்கட்சி செயல்பட்டு வருவதாகவும் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி கூறியுள்ளார்.

பீகார் மாநிலம் **Motihari**-யில் தேர்தல் பொதுக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், மக்களவைத் தேர்தலில் ஐ என் டி ஐ கூட்டணி பெரும் பின்னடைவை சந்திக்கும் என்று தெரிவித்தார்.

ஊழல் வழக்குகளில் சிக்கியுள்ளவர்களுக்கும், நாட்டுக்கு எதிராக பிரச்சாரம் மேற்கொள்பவர்களுக்கும் இந்த தேர்தலில் மக்கள் தக்க பதிலடி கொடுப்பார்கள் என்று அவர் கூறினார்.

தேசப்பிதா மகாத்மாகாந்தியடிகளின் சத்தியாகிரக வழியில் தாம் மிகுந்த நம்பிக்கை கொண்டிருப்பதாகவும், ஆனால் காங்கிரஸ் கட்சி காந்தியடிகளின் கனவுகளை நிறைவேற்ற தவறிவிட்டது என்றும் பிரதமர் குற்றம்சாட்டினார்.

காந்தியடிகளின் தூய்மை இயக்கத்தை நனவாக்கும் வகையில் தூய்மை இந்தியா இயக்கத்தை தேசிய ஜனநாயகக் கூட்டணி கொண்டு வந்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

ஏழை எளிய மக்களுக்கு மின்சாரம் மற்றும் சமையல் எரிவாயு இணைப்புகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

21-ஆம் நூற்றாண்டின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கான எந்த ஒரு திட்டமும் ஐ என் டி ஐ கூட்டணிக்கு இல்லை என்றும், அதை நிறைவேற்றும் திறன் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு மட்டுமே உண்டு என்றும் திரு நரேந்திரமோடி தெரிவித்தார்.

[]<<<>>>[]

ஜார்க்கண்ட் முதலமைச்சர் திரு ஹேமந்த் சோரன் கைது செய்யப்பட்டதில் அரசியல் உள்நோக்கம் இருப்பதாக ஆம் ஆத்மி கட்சியின் ஒருங்கிணைப்பாளர் திரு அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் ஜாம்ஷெட்பூரில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், பழங்குடியின மக்களின் வளர்ச்சிக்காக திரு ஹேமந்த் சோரன் பாடுபட்டவர் என்று தெரிவித்தார்.

[]<<<>>>[]

தமிழகத்துக்கு காவிரியில் இரண்டு புள்ளி ஐந்து டி எம் சி தண்ணீரை திறந்துவிட கர்நாடக அரசுக்கு காவிரி மேலாண்மை ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

புதுதில்லியில் இன்று காவிரி மேலாண்மை ஆணையத்தின் தலைவர் திரு எஸ் கே ஸ்கல்த்தர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காவிரி நீர் ஒழுங்காற்றுக் குழு அளித்த பரிந்துரையின் அடிப்படையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இன்றைய கூட்டத்தில் தமிழ்நாடு, கர்நாடகா,. கேரளா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

தமிழகத்தின் சார்பில் மாநில நீர்வளத்துறை செயலர் திரு சந்தீப் சக்சேனா, காவிரி தொழில்நுட்.பக்குழுத் தலைவர் திரு சுப்ரமணியம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கி மே மாதம் வரையில் தமிழகத்திற்குத் தர வேண்டிய இரண்டு புள்ளி ஐந்து டி எம் சி தண்ணீரை கர்நாடகா விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டது.

[]<<<>>>[]

குவைத் கடலோர காவல்படையினரால் கடந்த டிசம்பர் மாதம் கைது செய்யப்பட்ட நான்கு தமிழக மீனவர்களை விரைந்து விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு தமிழக அரசு சார்பில் மத்திய அரசுக்கு நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

மாநில தலைமைச் செயலர் திரு சிவதாஸ் மீனா, மத்திய வெளியுறவுத்துறை செயலருக்கு எழுதியுள்ள கடிதத்தில் கடந்த டிசம்பர் மாதம் ஐந்தாம் தேதி கைது செய்யப்பட்ட இந்த மீனவர்களை விடுவிக்கக்கோரி மாநில முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கடந்த பிப்ரவரி மாதம் ஒன்பதாம் தேதி பிரதமருக்கு கடிதம் எழுதியுள்ளதையும் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் அண்டை நாடுகளைச் சேர்ந்த கடற்படையினரால் அடிப்படி கைது செய்யப்படுவதை தடுக்கவும், அவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை பாதுகாக்கவும் உரிய தூதரக

வழிமுறைகளைப் பின்பற்றி தீர்க்கமான நடவடிக்கை எடுக்குமாறும் மாநில அரசின் சார்பில் அக்கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

[]<<<>>>[]

தென்மேற்கு வங்கக்கடல் பகுதியில் நாளை காற்றழுத்த தாழ்வுப்பகுதி உருவாக வாய்ப்பு உள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குநர் திரு செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

இது காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடைய வாய்ப்புள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழகத்தின் தென்மாவட்டங்களிலும், உள்மாவட்டங்களின் ஒரு சில பகுதிகளிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அவர் கூறினார்.

கடலில் சூறாவெளிக்காற்று வீசக்கூடும் என்பதல் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் நாளை மறுநாளைக்குள் கரைக்கு திரும்புமாறும் திரு செந்தாமரைக் கண்ணன் அறிவுறுத்தியுள்ளார்.

இதனிடையே மாநிலத்தின் பெரும்பாலான பகுதிகளில் இன்று மிதமான மழை பெய்துள்ளது.

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக பேச்சிப்பாறை அணையிலிருந்து மூன்றாவது நாளாக உபரி நீர் வெளியேற்றப்படுகிறது. இதன் காரணமாமக தாமிரபரணி ஆற்றின் கரையோரப். பகுதிகளில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பாக இருக்க மாவட்ட நிர்வாகம் அறிவுறுத்தியுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார். தேனி மாவட்டம் சோத்துப்பாறை அணை அதன் முழு கொள்ளளவான 126 புள்ளி இரண்டு எட்டு அடியை எட்டியதையடுத்து, அணையிலிருந்து உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதன் காரணமாக வராக நதிக்கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. காஞ்சிபுரம் மற்றும் அதன் சுற்றுவட்டார பகுதிகளிலும் இன்று இடியுடன்கூடிய மிதமான மழை பெய்துள்ளது.

[]<<<>>>[]

தமிழகத்தில் மழையால் பாதிக்கப்பட்டுள்ள பருத்தி, குறுவை நெல், வாழைப் பயிர்கள் ஆகியவற்றுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கேட்டுக் கொண்டுள்ளது. இது தொடர்பாக அந்த சங்கத்தின் சார்பில் வெளியிடப்பட்ட செய்திக்குறிப்பில், கடந்த பல நாட்களாக பெய்து வரும் மழையால் பருத்தி வயல்களில் தண்ணீர் சூழ்ந்து நின்றதாலும், வீசும் காற்று காரணமாகவும் பூக்கள் பெருமளவு கொட்டி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.,

பருத்தி காய்களில் மழைநீர் கோர்த்துள்ளதால் நிறம் மாறி விற்பனை செய்ய வாய்ப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது. திருச்சி மாவட்டத்தில் வாழை மரங்கள் சாய்ந்து விளைச்சல் குறைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பயிர்களின் பாதிப்பை மாநில அரசு வேளாண் துறை மூலம் கள ஆய்வு நடத்தி இழப்பீடு வழங்குமாறும் தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் கோரியுள்ளது.

[]<<<>>>[]

நாமக்கல் மாவட்டத்தில் கனமழையால் பாதிக்கப்பட்ட குடியிருப்புப் பகுதிகளை ஆட்சியர் திருமதி உமா இன்று நேரில் ஆய்வு செய்தார்.

[]<<<>>>[]

சேலம் மாவட்டம் ஏற்காட்டில் கோடை விழா மற்றும் மலர் கண்காட்சி நாளை தொடங்க உள்ளதை அடுத்து, சுற்றுலா பயணிகளுக்கு தரமான உணவு கிடைப்பதை உறுதி செய்திடும் வகையில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் இன்று உணவகங்களில் சோதனை மேற்கொண்டனர்.

[]<<<>>>[]

கொடைக்கானலில் இன்று நடைபெறுவதாக இருந்த படகுப்போட்டி மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக 25-ஆம் தேதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அறிவித்துள்ளது.

[]<<<>>>[]

தென்பெண்ணை ஆற்றின் நீர்பிடிப்புப் பகுதிகளில் மழை பெய்து வருவதையடுத்து கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூர் கெலவரப்பள்ளி அணைக்கு வரும் நீரில் கழிவுநீர் கலந்து வருவதால் மீன்கள் செத்து மிதப்பதாகவும், எனவே ஆற்றில் ரசாயன கழிவுகள் கலப்பதை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

[]<<<>>>[]

திருச்செந்தூர் அருள்மிகு சுப்ரமணியசுவாமி திருக்கோவிலில் வைகாசி விசாக திருவிழா நாளை நடைபெறுகிறது.

[]<<<>>>[]

வைகாசி விசாக திருவிழாவையொட்டி தென்காசி மாவட்டத்தில் சங்கரன்கோவில், தென்காசி மலர் சந்தைகளில் பூக்களின் விலை அதிகரித்துள்ளது.

[]<<<>>>[]

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இறுதிப் போட்டியில் பங்கேற்பதற்கான தகுதிச் சுற்று ஆட்டம் இன்று தொடங்குகிறது.

அகமதாபாத்தில் இன்று நடைபெறும் முதல் தகுதிச் சுற்று ஆட்டத்தில் கொல்கத்தா அணி – ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

[]<<<>>>[]

மலேசிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

கோலாலம்பூரில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த் இணையும், சிம்ரன் சிங்கி – ரித்திகா தாக்கர் இணையும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

***End of News***